ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1839/10 - 2013 දෙසැම්බර් මස 03 වැනි අඟහරුවාදා - 2013.12.03

1839/10 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 03 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. : மெது/3/1/2/71/21.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சின் குறிப்பு இல: 13/96/ எப்ஆர்/499.

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:-**

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், மெததும்பர பிரதேச செயலாளர் பிரிவில், உடசியப்பத்துவ தெற்கு கோரளை சிறு பிரிவில், மாங்கொட கிராம உத்தியோகத்தர் பிரிவில், மாங்கொட கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட மஹ. 5531 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தில் துண்டு இல. 1 எனக் காட்டப்பட்ட 0.6964 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழ் விபரிக்கப்பட்ட காணித் துண்டு:

**துண்டு இல. 01**

காணியின் பெயர்: கல்பொக்க கலபிடவத்த ; ஆரம்ப உரிமை கோருவோர்: எச். எம். டீ. ஜீ. முத்துமெனிகா, மாங்கொட, மெதமஹநுவர. ; காணியின் விஸ்தீரணம் : 0.6914 ஹெக்டயார்.

மேற் குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 29 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு மெததும்பர பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், அக் காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக் கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். எனக்கு பரிசோதனை செய்வதற்கு காணி உரிமையை உறுதிப்படுத்துவதற்கு காணியின் ஒப்பினையும் ஆவணங்களையும் ஒப்படைக்க வேண்டும்.

ஜே. எம். ஜே. கே. ஜயசுந்தர,
பிரதேச செயலாளர்,
மெததும்பர.

மெததும்பர பிரதேச செயலகம்,
தெல்தெனிய,
2013, ஓகத்து 24.

12 - 713

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*